## அணுசக்தி அதிகாரசபை – 2014

அணுசக்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அணுசக்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பீஎஸ்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் படி, நிதிக்கூற்றுக்கள் எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) **எஸ்எல்பீஎஸ்ஏஎஸ் 7 - பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்** என்பதில் குறிப்பிட்டவாறு ஐந்தொகைத் திகதியில் நிச்சயிக்கப்பட வேண்டிய நியாயப் பெறுமதியிலிருந்து முன்கொண்டு சென்ற தொகைகள் பொருண்மையாக வேறுபட்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபை அதனது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பிட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 129.39 மில்லியன் வரலாற்றுக் கிரயம் கொண்ட முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்கள் மீள் விலை மதிக்கப்படாது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டுகளிற்குமாக ஒழுங்கமைத்தல் பாதீடு (ஆர்பீ) தொடர்பில் சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 16,826,190 தொகையான இலங்கை அரசாங்கத்தின் நிதிக் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சிலிருந்து ரூபா 15 மில்லியன் கிடைத்திருந்தது. எவ்வாறாயினும், அந்த நிதியை பயன்படுத்தி அதிகாரசபை ரூபா 14,864,257 தொகையினை மாத்திரம் தீர்த்திருந்ததுடன் அதற்கமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்ட மீதி ரூபா 1,961,933 ஆகும். மேலும், அமைச்சிலிருந்து கிடைத்த மானியம் மற்றும் நிலுவையை தீர்ப்பதற்காக அதிகாரசபையால் செலுத்தப்பட்ட தொகை என்பன கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அமைச்சிலிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து எஞ்சிய தொகையான ரூபா 136,049 மாத்திரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வியாபார செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பன்நோக்கு கெம்மா கதிரியக்க வசதி (எம்ஜீஐஎவ்) செயற்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 121,144,190 தொகையான "கோபேல்ட்" (Cobalt) 60 மூல 250 KCi இன் மொத்த கொள்வனவுக் கிரயம் அதிகாரசபையின் கணக்குகளிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 33,156,406 தொகை மற்றும் ரூபா 14,052,726 தொகையான கிரயம் என்பன எம்ஜீஐஎவ் செயற்திட்டக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் (எம்ஜீஐஎவ் செயற்திட்டம்) கணக்கிலிருந்து பெறவேண்டியவைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அத்துடன், அமைச்சிலிருந்து பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொகை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ரூபா 44,008,113 மற்றும் ரூபா 35,020,267 தொகையான முறையே எம்ஜீஐஎவ் இலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் மற்றும் 2014 ஆம் ஆண்டில் வசதி தொடர்பில் அதிகாரசபையால் செய்யப்பட்டிருந்த செலவினம் என்பன அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2014 ஆம் ஆண்டிற்கான எம்ஜீஐஎவ் இன் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைக்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த தொகைக்குமிடையே ரூபா 276,517 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு விளக்கப்படவில்லை.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 4,803,479 வியாபாரப் பெறுவனவுகளில் ரூபா 1,867,801 தொகை ஒரு ஆண்டு தொடக்கம் ஒன்பது ஆண்டு காலம் வரையான வீச்செல்லையில் அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் முறையே விஞ்ஞான உபகரணங்களுக்கான முற்பணங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 9,639,453 கூட்டுத்தொகையான விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் பயன்படுத்த முடியாத உருப்படிகளை மெய்மையாய்வு செய்வதற்கான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 13,952,795 தொகையான கதிரியக்க பொருட்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட (பெறுமதி இனங்காணப்பட முடியாதுள்ள) ஏனைய அவ்வாறான சில பொருட்களின் பாதுகாப்பு, விநியோகம் மற்றும் பாவனையுடன் தொடர்புடைய விபரங்களும் பதிவேடுகளும் மற்றும் அவற்றை பயன்படுத்தி வழங்கப்பட்ட சேவைகளின் விபரங்களும் கணக்காய்விற்குக் கிடைக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டுள்ள கால எல்லையில் தொடர்புடைய பெறுகை நிறுவனங்கள் மற்றும் பங்குபற்றுனர்களின் ஒருங்கிணைப்புடன் செயற்திட்டங்களை அதிகாரசபை பூரணப்படுத்துதல் வேண்டுமென சர்வதேச அணுசக்தி முகவர் நிலையம் (ஐஏஈஏ) எதிர்பார்க்கின்றது. எவ்வாறாயினும், ஐஏஈஏ இனால் அங்கீகரிக்கப்பட்ட நிதிகளின் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள கணக்காய்விற்குக் கிடைக்கவில்லை.

ஆகையால், அதிகாரசபையினால் பின்வரும் பரப்புகள் மீதான கட்டுப்பாட்டு செயற்பாடுகளை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(i) ஐஏஈஏ இனால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் மீதான செயன்முன்னேற்றத்தை பதிவுசெய்தலும் அறிவித்தலும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக கொடைவழங்கும் முகவர் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதிகளை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் ஒதுக்கீடு செய்தலும் பயன்படுத்துதலும்

(iii) செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பிலான தற்போதைய செயலாற்றல்

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் இலங்கை கெமா நிலையம் (எஸ்எல்ஜீசீ) மற்றும் அழிவுறாத பரிசோதனைக்கான தேசிய நிலையம் (என்சீஎன்டீரீ) போன்ற சில பிரிவுகளிலுள்ள நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான 2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.4 ஆம் பிரிவு | உள்நாட்டு / வெளிநாட்டு பயிற்சிகளுக்காக ஆட்களை தெரிவு செய்தல் தொடர்பில் நடைமுறைகளை உருவாக்குவதற்காக அதிகாரசபையினால் பயிற்சிக் குழுவொன்று (பணிப்பாளர் சபைக்காக உப குழு) தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மிகப் பொருத்தமான உத்தியோகத்தர்களை பங்குகொள்வதற்கு பதிலாக சபை அங்கத்தவர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மீண்டும் மீண்டும் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (இ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | முன்னைய நிதியாண்டில் நட்டத்தினை பதிவுசெய்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு தவறியிருந்த அரசாங்க கூட்டுத்தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்கள் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,000 உபகாரச் சம்பளத்திற்கு மாத்திரம் உரித்துடையவர்களாவர். இருப்பினும், அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கு ரூபா 13,500 வீதம் உபகாரச் சம்பளமாக செலுத்தியிருந்ததுடன் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொள்ளாது 2014 ஆம் ஆண்டிற்காக அவ்வாறு செலுத்தியவை ரூபா 1,705,364 மொத்தமாக காணப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் நேரொத்த ரூபா 15,176,945 ஆன தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 25,596,777 ஆன தேறிய பற்றாக்குறையினை விளைவித்திருந்தமையால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 10,419,832 ஆன மேலுமொரு பின்னடைவைக் காட்டுகின்றது.
மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 50,637,815 அல்லது 38.5 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தச் செலவினம் 61,057,648 அல்லது 41.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையே நிதி வளைவுகளின் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணியாக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

**(அ) இலங்கை ஹெமா நிலையம்**

பன்னோக்கு ஹெமா கதிரியக்க வசதி (எம்ஜீஐஎவ்) செயற்திட்டம் பொது திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் முதலீட்டுச் சபை செயற்திட்டமொன்றாக 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சுக்கு 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு எடுக்கப்பட்ட பியகம ஏற்றுமதி பதனிடல் வலயத்திலுள்ள வளவில் அமைந்துள்ளது. செயற்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் 2014 பெப்ரவரியில் தொடங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தற்போது வரை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழுள்ள காணியின் குத்தகை உரித்துக்காக முதலீட்டுச் சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் அல்லது உடன்படிக்கையொன்றில் அதிகாரசபை கைச்சாத்திட்டிருக்கவில்லை. இந்த ஹெமா நிலையம் தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 746.6 மில்லியனாகும்.

(ii) நிலையத்தின் உரிமைத்துவம் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) உள்நாட்டுச் சந்தைக்கு உற்பத்திப் பொருட்களை வழங்குகின்ற வழங்குனர்களிற்காக மாத்திரம் சேவைகளை வழங்குவதற்கு போதுமானதாகவுள்ள ISO 9001:2008 தர முகாமைத்துவ முறைமையினை செயற்திட்டம் பெற்றுக்கொண்டிருந்தது. இருப்பினும், சர்வதேச சந்தையினை இலக்காகக் கொண்டு மருத்துவ கருவிகளை வழங்குகின்ற வழங்குனர்களிற்கு சேவைகளை வழங்குவதற்காக சர்வதேச தர நியம தேவைப்பாடுகளை அடைந்துகொள்வதற்கு தேவையாகவுள்ள சர்வதேச தர நியம சான்றிதழை (ISO 13485:2003 தர முகாமைத்துவ முறைமை) பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டத்திற்கு முடியாது போயிருந்தது. அதன்படி, செயற்திட்டத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் நாட்டின் ஒட்டுமொத்த தேவைகளையும் இலக்காகக் கொண்டிருக்கவில்லை. சந்தையில் தொழிற்படுகின்ற ஏனைய சில நிறுவனங்கள் இதனை ஒத்த சேவைகளை உயர் தரத்தில் வழங்குகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) செயற்திட்டத்தின் கதிரியக்க மூல வடிவமைக்கப்பட்ட செயற்பாடு 3,000 கியுரீ (kCi) ஆக காணப்பட்ட போதிலும், 250kCi மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், மொத்த இயலளவு செயற்திட்டத்தினால் உத்தம அளவில் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) செயற்திட்டத்தின் வடிவமைக்கப்பட்ட மனித வளத் (எச்ஆர்) தேவைப்பாடுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பின்றி காணப்பட்டமை காரணமாக, செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் இலக்குகளின் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களை அடைய முடியாது போயிருந்தது.

**4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

களஞ்சிய தன்னியக்க செயற்பாட்டு நோக்கத்திற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 389,375 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணனி மென்பொருள் பொதியொன்று 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மென்பொருள் பொதி குறித்த நோக்கத்திற்காக ஒருபோதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கை கெமா நிலையத்தின் திறப்பு விழாவுக்காக நால்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான 2013 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபை ரூபா 2,153,424 இனை செலவிட்டிருந்தது.

**4.4 பயனற்ற செலவினம்**

மீளாய்வாண்டில் ரூபா 1,440,000 தொகையான பதினைந்து கதிரியக்க பொருள் விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், அதனையொத்த பொருட்கள் அதிகாரசபையால் பயன்படுத்தப்படாது இருப்பில் காணப்பட்டன.

**4.5 மனித வள முகாமைத்துவம்**

காலரீதியாக மீளாய்வினை மேற்கொண்டு நெகிழ்வுத்தன்மை கொண்ட பதவியணி மட்டங்களை பேணிவரத் தவறியமை காணமாக 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 4 சிரேஷ்ட தரங்கள், 23 இரண்டாம் தரங்கள் மற்றும் 12 ஆரம்பத் தரங்கள் உள்ளடங்களாக நிரந்தரப் பதவியணியின் பல்வேறு மட்டங்களில் 39 வெற்றிடங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பும் நல்லாட்சியும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரை மட்டும் கொண்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரிற்கு ஏனைய மேலதிக வேலைகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன்படி, நிறுவனத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை கண்காணிப்பதற்காக அதிகாரசபையால் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் பொருத்தமானதாக வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5.2 கணக்காய்வுச் சபை**

கணக்காய்வுச் சபையால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் பணிப்பாளர் சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

அதிகாரசபையால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் பாதீட்டுற்கும் அமைவானதாக காணப்படவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டுகின்றது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்
(ஆ) கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்
(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்குதல்
(ஈ) கொள்வனவுகள்
(உ) வளங்களைப் பயன்படுத்துதல்
(ஊ) மனித வள முகாமைத்துவம்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஏ) பாதீட்டுக் கட்டுப்பாடு